# தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்

## புதிய உறுப்பினர் சேர்க்கை வழிமுறைகள்

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் புதிய உறுப்பினராக சேரவிரும்புவர்கள், தற்சமயம் ஒரு தமிழ் படத்தில் பணிபுரிபவராக இருக்க வேண்டும். பணிபுரியும் அந்த படத்தின் இயக்குநர் சங்கத்தில் உறுப்பினராக அவசியம் இருத்தல் வேண்டும். அந்த இயக்குநரிடம் கடிதம் பெற்றுவந்தால் மட்டுமே உறுப்பினராக சேர்வதற்கு விண்ணப்ப படிவம் வழங்கப்படும்.

## தேவையான சான்றுகள்

1. ரேஷன் கார்டு (நகல்)
2. ID Proof (நகல்)
3. கல்வி தகுதி சான்று (நகல்)
4. பாஸ்போர்ட் சைஸ் போட்டோ - 1.

மேற்கண்ட சான்றுகளுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அலுவலகத்தில் மேலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பம் சங்க செயற்குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்படும். அதன்பின் விண்ணப்பதாரருக்கு தகவல் அளிக்கப்படும். விண்ணப்பம் ஏற்கப்பட்ட விண்ணப்பதாரர் நேரில் வரவேண்டும். ரூ.15000 ரூபாய் பதினைந்தாயிரத்திற்கு சங்கத்தின் பெயரில் (TAMILNADU FILM DIRECTORS ASSOCIATION) DD எடுத்து மேலாளரிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவும். ரசீதை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்..

முதலில் 3 ஆண்டுகளுக்கு அசோசியேட் உறுப்பினர் கார்டு வழங்கப்படும். அந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு படம் பணிபுரிந்து அதற்கான தணிக்கை சான்று நகல் ஒப்படைத்த பிறகு, மீண்டும் செயற்குழு கூட்டத்தில் பரிசீலித்து நிரந்தர உறுப்பினர் கார்டு வழங்கப்படும்.

சங்க விதிமுறைகளின்படி அசோசியேட் உறுப்பினர் பொதுக்குழுவில் கலந்து கொள்ள இயலாது, சங்கத்தின் தேர்தலில் வாக்களிக்க உரிமை கிடையாது, ஆனால் தொழில் பாதுகாப்பு உண்டு என்று தெரிவிக்கபடுகிறது.

| விக்ரமன் | V.சேகர் | RK.செல்வமணி |
|---|---|---|
| (தலைவர்) | (பொருளாளர்) | (செயலாளர்) |